மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதல்வர் அண்ணன் அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று கனிவோடு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. தகவல் கோரல்

(அ) தமிழகத்தில் ஹைட்ரோகார்பன் திட்டத்திற்கு அனுமதி வழங்கப்படாது என்ற கொள்கை முடிவினை எடுத்து இந்தக் கூட்டத் தொடரிலேயே அறிவித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நாடாளுமன்றத்திலே* Hydrocarbon *திட்டத்தைப் பற்றி ஒரு வினா எழுப்பப்பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி உள்ளிட்ட தமிழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கேள்வியை நாடாளுமன்றத்தில் எழுப்பியிருக்கின்றார்கள். அதற்கு மாண்புமிகு மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு மற்றும் உருக்குத் துறை அமைச்சர்* Thiru Dharmendra Pradhan *அவர்கள் ஒரு பதிலைச் சொல்லியிருக்கிறார். தமிழகத்தில்* Methane *திட்டம் எதுவும் செயல்படுத்தப்படவில்லை. 7* Hydrocarbon *திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் இரு* Hydrocarbon *திட்டங்களுக்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களோடு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழ்நாட்டிற்கு*

2019 ஜூலை 16] [திரு. மு.க. ஸ்டாலின்]

மேலும் 23 Hydrocarbon கிணறுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. Petroleum and Mining licence அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது என்று கூறியிருக்கிறார். ஏற்கெனவே, இதே அவையில் நான் Hydrocarbon திட்டத்தைப் பற்றி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்தேன். அப்போது பதிலளித்துப் பேசிய மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் தமிழகத்தில் Hydrocarbon திட்டத்தைச் செயல்படுத்த தமிழக அரசு உறுதியாக அனுமதிக்காது, விவசாயிகள் அச்சப்படத் தேவையில்லை என்று இந்த அவையில் அவர் பேசி, அது பதிவாகியிருக்கின்றது.

அதுமட்டுமல்ல, எங்களுடைய கழக உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்கூட ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து, இதைப் பற்றி அவர் கருத்து கேட்ட நேரத்தில், அப்போது பதிலளித்துப் பேசிய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள், தமிழகத்தில் Hydrocarbon திட்டத்திற்கு அனுமதியே கிடையாது. எந்த நிறுவனத்திற்கும் தமிழகத்தில் அனுமதி வழங்கப்படவில்லை. ONGC அனுமதி கோரியும், தமிழக அரசு ஒப்புதல் தரவில்லை. இதுதான் உண்மை என்று உறுதியாக பதில் தந்திருக்கிறார். ஆகவே, நான் கேட்க விரும்புவது Hydrocarbon திட்டத்திற்கு அனுமதி வழங்கப்படாது என்பதை ஒரு கொள்கை முடிவாக எடுத்து, இந்த அரசு அறிவிக்க வேண்டும். அறிவிப்பது மட்டுமல்ல; அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அதனை அனுப்பி வைத்தால்தான், அங்கிருக்கக்கூடிய விவசாயிகள் பெருமூச்சு விட்டு, நிம்மதி அடைய முடியும். ஆகவே, Hydrocarbon திட்டத்திற்கு அனுமதி வழங்கப்படாது என்று ஒரு கொள்கை முடிவினை இந்தக் கூட்டத் தொடரிலேயே அரசு எடுக்க வேண்டும். காரணம் டெல்டா பகுதியில் இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் ஒரு பதட்டமான சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

நேற்றைய தினத்தில்கூட, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தலைவர் திரு. நல்லக்கண்ணு அவர்கள் தலைமையில் ஒரு போராட்டம் நடந்திருக்கிறது. அவர் கைது செய்யப்பட்டார். இப்படிப் போராட்டங்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. எனவே, இதற்கு ஒரு முடிவு காண வேண்டுமென்று சொன்னால், உடனடியாக இந்தக் கூட்டத் தொடரிலேயே ஒரு கொள்கை முடிவினை எடுத்து அறிவிக்க வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் Hydrocarbon திட்டத்தைப் பற்றி நாடாளுமன்றத்தில் மாண்புமிகு மத்திய அமைச்சர் கூறியதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அதனை நாங்களும் ஒத்துக்கொள்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டபோதுகூட நான் சொல்லியிருக்கிறேன்.*

முற்பகல் 11–15

மத்திய அரசாங்கம் தனது புதிய கொள்கையின்படி ஒற்றை licence என்ற முறைப்படி, ஏலம் விட்டுவிடுகிறார்கள். அதை ஏலம் எடுக்கின்ற நிறுவனம், மத்திய அரசாங்கத்தோடு ஒப்பந்தம் போட்டுக்கொள்கிறார்கள். நீங்கள் சொன்னதுபோல் அவர்கள் கொடுத்திருக்கலாம். ஆனால், அவர்கள் மத்திய அரசாங்கத்தோடு ஒப்பந்தம் போட்டிருந்தாலும் அவர்கள் தமிழகத்தினுடைய நிலப் பரப்பிலே அந்தத் திட்டத்தைத் தொடங்க வேண்டுமென்றாலும், ஆய்வு செய்ய வேண்டுமென்றாலும், உற்பத்தி செய்ய வேண்டுமென்றாலும், பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு விதிகள், 1959 பிரிவு 5 (1) (ii)-ன்படி தமிழக அரசினுடைய அனுமதியைக் கண்டிப்பாக பெற்றே தீர வேண்டும். அந்த அனுமதிக்கான விண்ணப்பங்கள் தற்போது மத்திய அரசால் வழங்கப்பட்டு, ஏலத்தில் எடுப்பவர்களுக்கு அந்த விண்ணப்பத்தினை அளித்திருக்கிறார்கள். அந்த விண்ணப்பத்தின்மீது தற்போது தமிழக அரசு எந்தவிதமான முடிவும் தெரிவிக்கவில்லை. ஏற்கெனவே, கடந்த ஆட்சிக் காலத்தில் விண்ணப்பங்கள் அளிக்கப்பட்டு, அது விவசாயிகளின் எதிர்ப்பின் காரணமாக அன்றைக்கு தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் வல்லுநர் குழுவினை அமைத்து, அந்த வல்லுநர் குழுவின் பரிந்துரையினை ஏற்று, அன்றைக்கு அளிக்கப்பட்ட அந்த ஒப்பந்தத்தின் அனுமதியை இரத்து செய்த அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அதே கொள்கையைத்தான் இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கிறார்கள். அவர்கள் விண்ணப்பங்கள் அளித்திருந்தாலும், விவசாயிகளின் எதிர்ப்பின் காரணமாக

2019 ஜூலை 16] [திரு. சி.வி. சண்முகம்]

சுற்றுச்சூழலைப் பாதிக்கின்ற அந்தத் திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்தாலோசித்து, மாண்புமிகு அம்மா அவர்கள் வல்லுநர் குழுவை அமைத்து அதனுடைய சாதக, பாதகங்களை ஆராய்ந்து எப்படி அதை நிராகரித்தார்களோ, அதே வழிமுறையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசும் கண்டிப்பாக முடிவெடுக்கும் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இல்லாத ஒன்றை இருப்பதைப்போன்று மக்களை அச்சுறுத்திக்கொண்டு, பயமுறுத்திக்கொண்டு போராட்டங்கள் நடத்தினால் அதற்கு இந்த அரசு பொறுப்பாகாது. உயர் நீதிமன்றமே தெளிவாகக் கேள்வி கேட்டிருக்கின்றது. தமிழக அரசே இந்தத் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றபோது நீங்கள் எதற்குப் போராட்டம் செய்கின்றீர்கள் என்று உச்ச நீதிமன்றம் கேள்வி கேட்டிருக்கின்றது. நீங்கள் போராட்டம் செய்தால் நாங்கள் என்ன செய்வது? Wanton–ஆக நான் ஜெயிலுக்குப் போகிறேன், நான் ஜெயிலுக்குப் போகிறேன் என்று சொன்னால், அதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் நலன் கருதி போராடுபவர்களைக் கொச்சைப்படுத்திப் பேசுவது சரியல்ல. நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் சம்பந்தப்பட்ட மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் அவர்கள் தந்திருக்கக்கூடிய பதிலின் அடிப்படையில்தான் நான் மீண்டும் மீண்டும் கேட்கிறேன். டெல்டா பகுதியில் இருக்கக்கூடிய விவசாயப் பெருங்குடிமக்கள் நிம்மதியாக இருக்கவேண்டும் என்று சொன்னால், உடனடியாக ஒரு கொள்கை முடிவெடுத்து, அதை நீங்கள் அறிவிக்கவேண்டும். அதனை நீங்கள் இந்த அவையிலே, இந்தக் கூட்டத்தொடரிலே நிறைவேற்றினால்தான், அங்கிருக்கக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்கள் நிம்மதி அடைவார்கள். மேலும், விவசாயிகள் போராட வேண்டிய அவசியம் ஏற்படாது என்கிற அந்த எண்ணத்தில்தான் நான் இந்தக் கருத்தைப் பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாரையும் கொச்சைப்படுத்த வேண்டும் என்கின்ற நோக்கம் எங்களுக்கு இல்லை. உயர் நீதிமன்றத்திடம் அரசு தெளிவாகச் சொல்லிவிட்டது. எந்த ரூபத்திலும், எந்த நிலையிலும் ஹைட்ரோ கார்பன் திட்டத்திற்கு தமிழக அரசு அனுமதி அளிக்காது என்பதைத் தெள்ளத்தெளிவாக நாங்கள் சொல்லிவிட்டோம். உயர் நீதிமன்றமும் கேள்வி கேட்டுவிட்டது. தமிழக அரசு இந்தத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றபோது எதற்காகப் போராட்டங்கள் செய்கிறீர்கள் என்று கேள்வியும் கேட்டுவிட்டது. அதையும் மீறி ஹைட்ரோ கார்பன் வந்துவிட்டது, வந்துவிட்டது என்று மக்களை அச்சுறுத்துவதற்காக, அரசியலுக்காக நடத்தப்படுகின்ற போராட்டத்திற்கு நாங்கள் எதுவும் செய்ய முடியாது. அதுபோல், மத்திய அரசாங்கத்திலும், நேற்று நாடாளுமன்றத்திலும் சொன்னதாகச் சொன்னார்கள். அதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். மத்திய அரசாங்கம் புதிய ஏலக் கொள்கையின்படி ஏலம் விடுகிறது. யாரையும் கேட்பதில்லை. தமிழகம் மட்டும் அல்ல; இந்தியா முழுவதும் கனிம வளங்கள் எங்கெங்கு உள்ளனவோ, அதையெல்லாம் கண்டறிந்து, அதனை அவர்கள் web–site–ல் போட்டிருக்கிறார்கள். அதைப் பார்த்து யார் அதை ஏலத்தில் எடுக்க வேண்டும் என்று விரும்புகிறார்களோ, அவர்கள் தரும் விண்ணப்பங்கள்மூலம் அதனை பொது ஏலத்தில் கொண்டுவந்து அவர்களுக்கு ஒற்றை உரிமையின்படி வழங்குகின்றது. அந்த ஒப்பந்தங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஆனால், சம்பந்தப்பட்ட மாநிலங்களைப் பொறுத்தவரையில் நமக்குச் சட்டத்தில் இடம் இருக்கின்றது. என்னதான் நீங்கள் கொள்கை முடிவெடுத்தாலும், சட்டத்தில் இடம் இல்லாமல் யாரையும், எந்தத் தொழிலையும் நீங்கள் செய்யலாம் என்றோ செய்யக்கூடாது என்றோ சொல்ல முடியாது. சட்டத்தில் நமக்கு இடம் இருக்க வேண்டும். நமக்குத் தெளிவாக அந்தச் சட்டத்தில் இடம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு விதிகள், 1959 பிரிவு 5 (1) (ii) ன்படி சம்பந்தப்பட்ட மாநில அரசினுடைய அனுமதியைப் பெறாமல் மாநில நிலப்பரப்பில் இந்தத் திட்டத்தினை ஆரம்பிக்கக் கூடாது, ஆரம்பிக்க முடியாது என்று தெளிவாக இருக்கின்றது. இதற்குமேல் வெறும் கொள்கை முடிவு எடுத்து நாம் என்ன செய்யப்போகிறோம். சட்டத்திலேயே நமக்குத் தெளிவாக உரிமை இருக்கின்றது. இதனைத் தடுப்பதற்கும் உரிமை இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) தடுப்பதற்கும் உரிமை இருக்கின்றது. நிறுத்துவதற்கும் உரிமை இருக்கின்றது.

(மேசையைத் தட்டும் ஒலி) அதையும் மீறி அவர்கள் செய்தால் அவர்கள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கும் அரசுக்கு உரிமை இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

(ஆ) திண்டுக்கல் மாவட்டம், காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் விநியோகம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி அவர்கள். (குறுக்கீடு) அமைதியாக இருங்கள். அடுத்த பிரச்சினைக்குச் செல்ல வேண்டும்.*

திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், காவேரி கூட்டுக் குடிநீர் திட்டம் குறித்து. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் ஒரு நிமிடம் இருங்கள். காவேரி குடிநீர்ப் பிரச்சினை குறித்துப் பேசுகிறீர்கள் என்று தெரிகின்றது. இதே பொருள் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அர. சக்கரபாணி, திரு. ஐ.பி. செந்தில்குமார், திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் ஆகியோர் விதி 55–ன்கீழ் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் தொடர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கலாம்.*

முற்பகல் 11–20

திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக 3 திட்டங்கள் அங்கே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. கலைஞர் ஆட்சிக் காலத்தில் 2008 ஆம் ஆண்டு, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபொழுது, வேடசந்தூர் தொகுதி phase II முழுவதும், அதேபோல ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில் 201 கிராமங்களும், ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதியில் ஏறத்தாழ ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி மற்றும் பிற பகுதிகளில் 109, 101, 93 கிராமங்களும் என 303 கிராமங்களுக்கும் அந்தத் திட்டம் முடிக்கப்பட்டு, அது பயன்பாட்டிற்கு வந்த நேரத்தில், கடந்த ஆண்டு இதே அவையில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அந்தத் திட்டத்தின் மூலமாக வரக்கூடிய தண்ணீர் ஆத்தூர் தொகுதிக்கு இன்னும் கிடைக்கவில்லை என்று கவனத்தை ஈர்த்த நேரத்தில், ஆகஸ்ட் மாதத்திற்குள் அது நிறைவேற்றப்படும் என்று அவர்கள் இந்த அவையிலே தெரிவித்தார்கள்.*